மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்த கண்மாய் 1971–72-ல் மராமத்து செய்யப்பட்டது. இந்தக் கண்மாயை தூர் வாரும் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டால் எரியின் எதிர்வாயிலில் உள்ள நிலங்களின் சொந்தக்காரர்கள் பலத்த ஆட்சேபனை செய்வார்கள். ஆகவே, தூர் வாரும் வேலையை ஒத்தி வைத்து, தேவையில்லை என்று கருதி, மராமத்து மட்டும் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

*441. வினு.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானுமதுரை ஊராட்சி ஒன்றியம், மிளகனூர் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு த. சோனையா : தலைவரவர்களே, மானுமதுரை ஊராட்சி ஒன்றியம் மிளகனூர் கண்மாய் அந்தப் பகுதியிலே பெரிய கண்மாயாகும். அந்தக் கண்மாய் ஏற்கெனவே ஜமீன்தார் காலத்தில் வெட்டப்பட்டது என்றும் அதற்குப்பிறகு அந்தக் கண்மாயை ஆழப்படுத்தவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். அதை ஆழப்படுத்தினுல் தீவிரத் திட்ட சாகுபடிக்கு ஏற்ப அதிகமான விளைச்சல் உண்டாகும். அதை மனதில் கொண்டு அதில் தீவிர முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தக் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை. ஆனுல் மராமத்து செய்ய மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு, வேலை நடந்து வருகிறது.

*442. வினு.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானுமதுரை ஊராட்சி ஒன்றியம், கட்டிக்குளம் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய கண்மாய் இராமநாதபுரம் கண்மாய். அதற்கு அடுத்தபடியாக உள்ள இரண்டாவது பெரிய கண்மாய் இந்த கட்டிக்குளம் கண்மாயாகும்.